# செட்டிநாட்டு (பாகனேரி) புத்த கயா

பாகனேரி என்னும் ஒரு சிற்றூரில் பிப்ரவரி 3-ம் தேதி புத்தர் கோயில் கும்பாபிஷேகம் செய்து, பிப்ரவரி 11-ம் தேதி சனிக்கிழமை புத்தருக்கு கண் திறப்பு நிகழ்வை நடத்துகிறார்கள் என்ற போது புத்தருக்கு கோயிலா? கும்பாபிஷேகமா? என்று பலரும் எண்ணியதுபோல் நமக்குள்ளும் விடை தேடிப்போகவேண்டிய சூழல் ஏற்பட்டது.

உள்ளே நுழையும்போதே ஒரு பரவசம் நிரம்பிய சூழலை உணராதவர்கள் இருக்கமுடியாது. கூட்டம் அதிகமாக இருந்தாலும் நிசப்தம் நிரம்பி வழிந்த மனதோடு மக்கள் அமர்ந்திருந்ததை காணமுடிந்தது. புத்தர் சிலையருகில் வரிசையாய் புத்தபிட்சுக்கள், சூஸ்சாங் சூஸ்சாங் என்று மிக நேர்த்தியாக வாய் அசைய கைகள் நீட்டி நீட்டி மந்திரங்கள் ஜபிக்க இதுவரை பார்த்திராத ஒரு காட்சியாகி போனது மக்களுக்கு.

புத்தரை நினைவு வைத்துக்கொள்வதை விட புத்தர் என்று சொன்னாலே நினைவில் வரக்கூடிய மனிதராகி விட்டார் பாகனேரி மணிகண்டன்.

தன்னுடைய இல்லத்தில் ஒரு பகுதியில் புத்தரை பிரதிஷ்டை செய்து தன் குருவுக்கு மரியாதை செய்திருக்கிறார் மணிகண்டன். இது கோவிலும் அல்ல. புத்தர் கடவுளுமல்ல. புத்த மதத்தை பரப்பும் நோக்கமும் அல்ல என்பதில் தெளிவாக இருக்கிறார்.

அவதார புருஷர்களை குருவாக ஏற்பதும் அவர்களின் கொள்கைகளை பின்பற்றுவதும் கொண்டாடுவதும் இன்று மட்டுமல்ல காலங்காலமாக தொன்று தொட்டு தொடரும் வழக்கம் இந்தியர்களுடையதல்லவா. அதன் வழி அப்பர், சுந்தர், திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் ஆகியோரை மட்டுமன்று அறுபத்திமூன்று நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் பாசுரம் பாடிய மரபு நம் இந்திய மரபு. அதன் தொடர்ச்சியாக ஆதிசங்கரரும் சாய்பாபா, புத்தர் என்ற ஞான குருக்களை பின்பற்றுவதும் அக்குருமார்கள் மக்கள் மனதில் இருக்கக்கூடிய அறியாமையை போக்கி தங்களை நல்வழிப்படுத்தும் ஆசான்களாக இந்த குருக்கள் வழி நடத்துகிறார்கள் என்பதே நம்பிக்கை.

அன்பு என்ற ஒன்றே நிலையானது என்ற கொள்கையை தன்னுள் உணர வைத்த குருமார்களை வழிபடுவதாகும்.

எல்லாவற்றையும் அடைவது மட்டுமே வாழ்க்கை என்று ஓடிக்கொண்டிருக்கும் மனித

இனத்தை சற்றே தட்டி எழுப்பி இழப்பதும் இணைந்ததே வாழ்க்கை என்பதை தன் வாழ்வில் உணர்த்திய ஞான குருவல்லவா புத்த பெருமான்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தனது பதவியை வலியத் துறப்பதென்பது இதிகாசப் புராணங்களின் மட்டுமே காணப்படும். வரலாற்றுப் பதிவுகளில் அது அபூர்வம். புத்தர்கள் அரண்மனை சுகத்தை வெறுத்து வெளியேறி துறவு மேற்கொண்டது விதிவிலக்கின் ஒன்றானது.

பாசம், நேசம் அக்கறை கொள்கிற மனதை பிரிவு என்கிற ஒன்று ஏன் தாக்குகிறது என்று எண்ணியவருக்கு துறவு எண்ணம் மேலோங்க பித்தராகி திரிந்தவருக்கு போதி மரத்தடியில் ஞானம் கிடைத்தது.

அதேபோன்றே தன் திறனால் பணம், காசு, தங்கம், வைரமென சம்பாதித்து குவித்தாலும் இவ்வசதிகள் மட்டுமே சந்தோஷமல்ல என்பதை உணர்ந்து அதன் பிறகும் கூட துறவறம் பூண்டவரல்லவா நம் பட்டிணத்தார். அவரும் நம் குருவல்லவா.

மனிதனாக பிறந்த எல்லோருக்கும் இறைவனிடம் கோரிக்கைகளும், வேண்டுதல்களும் உண்டு. காது கொடுத்து கேட்கும் நபர் தான் கடவுள். அந்த கடவுளை குரு மூலமாக அடைவது எளிது. நல்லவை எது தீயவை எது என்பதை தன் அனுபவத்தால் உணர்ந்து நல்வழிப்படுத்தும் விதமாக போதித்தவர்கள் இத்தகைய குருமார்கள்.

நாகரீகம், அறிவியல் வளர்ச்சி, கணினி இணையமென உலகம் சுருங்கினாலும், விரிந்தாலும், மாறுபாடுகள் தோன்றிக் கொண்டேயிருந்தாலும் வசதிகள் வந்தாலும் போனாலும் உலகில் என்றுமே மாறாதது அன்பு என்ற போதனையை உள்வாங்கி உணர்த்தும் ஞானகுருவாக இங்கு அமர்ந்திருக்கும் மனோமய புத்தர் கடவுள் அல்ல. நாம் கண்மூடி அமைதியை தேடி அமரக்கூடிய ஒரு இடமே இந்த பாகனேரி புத்தர் கூடம் என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறார் மணிகண்டன்.

தன்னை ஈன்றெடுத்த தாய் தந்தைக்கு ஒரு வீடும் தன் எண்ணங்களை தூய்மையாக்கி தெளிவை உண்டாக்கிய குருவுக்கு ஒரு பீடமும் அமைத்து மாதா, பிதா, குருவுக்கு மரியாதை செய்திருக்கிறார் மணிகண்டன்.

அமைதி வேண்டி புத்தரின் நிழலில் அமர்ந்து வழிபடுபவர்கள் ஏதொரு பொருளும் கொண்டுவர வேண்டாம். காசு, பணம், உண்டியல் கிடையாது. ஊதுபத்திகூட அங்கு வைக்கப்பட்டிருக்கும். தேவையென்றால் ஏற்றி வைத்து கண்மூடி அமரலாம். அமைதியை தேடும் இடமாக அமைத்திருக்கிறார் புத்தர் கூடத்தை.

Website : paganeri.Org

**வள்ளிக்கண்ணு நாகராஜன்**

இக்கோவிலை நிறுவியர் சிங்கப்பூரில் Cal4Care (CEO & Founder) என்ற தொலை தொடர்பு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் பாகநேரி சிறுவயல் அண்ணாமலை செட்டியார் வீட்டைச் சேர்ந்த மணிகண்டன் அவர்கள். பெற்றோர் சொக்கலிங்கம் செட்டியார் - சீதாலெட்சுமி ஆச்சி.


மனோமய புத்தர்










MANOMAYA BUDDHA SHRINE
மனோமய புத்த பீடம்
Private Temple,
தனியார் கோவில்,
காலை 07:00AM to 09:00AM
மாலை 04:00PM to 06:00PM
No Donations are accepted in any means
எந்த வகையிலும் நன்கொடைகள்
ஏற்றுக்கொள்ளப்படாது
Join us our community
Manomay Buddha
Whats App group



